செ.வெ.எண் : 07/ செப்டம்பர் நாள் : 03.09.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

## புதிய ஆழ்துளை கிணறு அமைக்க 50 சதவீதம் மானியத்துடன் வங்கிக்கடன் பெற விண்ணப்பிக்கலம் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகம் மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளை சேர்ந்த சிறுகுறு விவசாயிகளுக்கு நீர்பாசன வசதிகள் ஏற்படுத்த புதிய ஆழ்துளை கிணறு அமைக்க 50 % மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதிய ஆழ்துளை கிணறு அமைத்து பாசன வசதி ஏற்படுத்திக்கொள்ள அதிகபட்சம் ரூ.1 இலட்சம் வரை வங்கிக்கடன் மற்றும் அதற்கு இணையான 50 % அரசு மானியம் அதிய பட்சம் ரூ.50,000 வரை வழங்கப்படுகிறது.

சாதிச்சான்று, இருப்பிடச்சான்று இணைக்க வேண்டும் விண்ணபத்தாரர் சிறுகுறு விவசாயி என்பதற்கான சான்றினை வட்டாட்சியரிடமிருந்து பெறவேண்டும். நில உடமைக்கு ஆதாரமாக கணினி வழிபட்டா மற்றும் அடங்கல் நகல் இணைக்க வேண்டும். தகுதியுடைய விவசாயிகள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்படும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தை அணுகி பயன்பெறலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**